# 50வது ஆசிய ஆயர்களின் கூட்டமைப்பின் மாநாட்டிற்கான இறைவேண்டல்

உமது மிகுந்த பேரன்பினால் பேறுப்பெற்ற எங்கள் தந்தையே, தம்முடைய பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பின் வழியாகவும் தூய ஆவியாரின் வல்லமையின் வழியாகவும், உம்மோடும் ஒருவர் மற்றவரோடும் ஒப்புரவாக உம்முடைய ஒரே பேறான மகனை அனுப்பினீர்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பிறந்த ஆசிய ஆயர்களின் கூட்டமைப்பின் மாநாட்டிற்காக உமக்கு நன்றி கூறி வாழ்த்துகின்றோம். தெய்வீக முன்னுணர்வினாலும் தூய ஆவியாரின் வழிநடத்துதலினாலும் ஆசியாவில் உள்ள ஆயர்கள் சந்திப்பின் வழியாக, ஆசிய ஆயர்களின் கூட்டமைப்பின் மாநாட்டை உருவாக்கினார்கள். இந்த பரந்த கண்டமான ஆசியாவில் உள்ள உம்முடைய அன்பான மக்களுக்கு தன் அன்பின் பணியிலும் சேவையிலும் ஆசிய ஆயர்கள் கூட்டமைப்பின் மாநாடு நிலை உறுதியுடன் இருப்பதாக!

எங்கள் குடும்பங்களின் நிலைத்தன்மையையும், எங்கள் இளைஞர்களின் கனவுகளையும், எங்கள் சுற்றுச்சூழலின் ஒருமைப்பாட்டையும், மேலும் மக்கள், கலாச்சாரம் மற்றும் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தின் சவால்களை சமாளிக்க எங்களுக்கு உதவியருளும்.

மரியாளின் பரிந்துரை மற்றும் பாதுகாக்கும் தாய்மைகுணம், திருஅவையின் அன்னை, புதிய மறைப்பரப்பின் நட்சத்திரம் வழியாக ஆசிய ஆயர்கள் கூட்டமைப்பு மாநாட்டின் 50வது ஆண்டு விழா, ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், இடம் பெயர்ந்தவர்கள், அந்நியர்கள் மற்றும் சுரண்டலின் காயங்களுடன் புலம்பும் அன்னை பூமிக்காக நமது பணியில் நற்செய்தியை உயிர்பூட்டவும் உயிர்கொடுக்கவும் செய்து உண்மை புதுப்பித்தலுக்கு புதிய பாதைகளை பகுத்தறிந்து மேற்கொள்வதற்கு ஏற்ற நேரமாக அமையும்.

இந்த வேண்டுதல் அனைத்தும் தூய ஆவியின் ஐக்கியத்தில் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை நோக்கி மன்றாடுகிறோம். ஆமென்.